C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் கிறித்தவ சபை அல் அயின்

மன்னா.

பொழிவு : 18 | OCTOBER 2026 | ஆகாரம் : 10

அவனவன் விசனமாயுமல்ல,
கட்டாயமாயுமல்ல,தன் மனதில்
நியமித்தபடியே கொடுக்கக்கடவன்;
உற்சாகமாய்க்கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7.



UPCOMING EVENTS

All Sun Oct '26

5:00 pm

OUT REACH MINISTRY - CAMP

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Sunday

---

03 Oct '26

10:30am

FASTING PRAYER

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Saturday

---

10 Oct '26

7:30pm - 09:30pm

EVENING CHURCH SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

---

03 17 Oct '26

7:30pm - 09:30pm

HOLY COMMUNION SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

All Wed Oct '26

7:30 pm

BIBLE STUDY & PRAYER

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Wednesday

---

24 Oct '26

04:30 pm

HARVEST FESTIVAL SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

---

31 Oct '26

7:30pm - 09:30pm

PRAISE & WORSHIP SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

---

31 Oct '26

11:30 pm

MONTH END SERVICE

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Saturday

---

31 Oct '26

9:30 pm

BIBLE QUIZ

HOSEA & ROMANS

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

ஆயர் மடல்

From the Pastor's Desk



அன்பிற்கினியவர்களே,
ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.

இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் 1875 ஆம் ஆண்டு அக்டோபர் 31ம் தேதி பிறந்தவர்.இவர் சுதந்திர இந்தியாவின் முதல் துணைப் பிரதமராக ஆட்சி செய்தார்.இவரது பிறந்த தினம் தேசிய ஒற்றுமை தினம் என 2014 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் கடைபிடிக்கப்படுகின்றது.

இந்தியா முழுமைக்குமான ஒற்றுமை வேண்டும் அனைவரும் சகோதர,சகோதரிகளாக வாழ வேண்டும் என்கிற கருத்தை முன்வைத்து ஒற்றுமைக்கான ஓட்டம் (Run for Unity) என்பதையும் நடத்தினவர்.

பிரியமானவர்களே,நமது ஆண்டவரும் நாம் அனைவரும் சகோதர,சகோதரிகளாக ஒரு குடும்பமாக ஒருமித்து வாழ வேண்டும் என்பதை தெளிவுப்படுத்துகிறார்.இதனை தாவீது சங்கீதம் 133-ல் மிக குறிப்பாக பாடுவதை நாம் கவனிக்கலாம்.சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமும் ஆனது என்று(சங் 133:1)பாடுவதை பார்க்கிறோம்.

இந்த அறுவடைப் பண்டிகைக் காலத்திலும் நமது விழாக்களின் வழியாக ஆண்டவர் இயேசுவை முன் வைத்து நாம் அனைவரும் ஒரு குடும்பம் என்கிற ஒற்றுமையை வெளிப்படுத்தி,கடவுளை மகிமைப்படுத்துவதே இதன் அடிப்படை நோக்கமாக,கடவுளுக்கு நன்றி செலுத்தும் விழாவாக அமைந்திட வேண்டும்.

யோவான் 6:5-11 வரை உள்ள பகுதியில், ஆண்டவர் இயேசுவால் செய்யப்பட்ட ஒரு அற்புத நிகழ்வை பார்க்கிறோம்.அந்திகழ்வில் ஒரு சிறு பையனின் கொடையை (யோவான் 6:9)நாம் கவனிக்க வேண்டும்.

இயேசுவிடம் வாருங்கள்:

யோவான் 6:5 ஆம் வசனத்தில் இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து திரளான மக்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு]தார்.நாமும் கூட ஆண்டவர் இயேசுவை உள்ளபடியே தேடிச் சென்றால் நம் வாழ்விலும் நிறைவைக் கண்டுகொள்ள முடியும், ஆண்டவர் இயேசுவை நாடி,தேடி,ஓடி வருவோரை அவர் தம்மிடம் சேர்த்து நிறைவாய் நடத்துகின்றார்.



உள்ளதைத் தாருங்கள்

யோவான் 6:9-ல் ஐந்தாயிரம் மக்கள் ஆண்கள் மாத்திரம் இருந்து அக்கூட்டத்தில் ஒரு சிறு பையன் தன்னிடம் உள்ளதை ஆண்டவர் இயேசுவிடம் கொடுக்கின்றான்.அது ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களுமே.அந்தக் கொடையால் அங்கு இருந்த அத்திரளான மக்கள் அனைவரும் நிறைவோடு உண்டு மீதியாக 12 கூடையையும் எடுத்ததை நாம் பார்க்கிறோம்.எனவே அன்பானவர்களே, நம்மிடம் உள்ளதை உதாரத்துவமாய் ஆண்டவர் இயேசுவிடம் தரும்பொழுது அது நமக்கும்,பிறருக்கும் ஆசீர்வாதம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நிறைவாக வாழுங்கள்

ஆண்டவர் இயேசுவிடம் வர வேண்டும்,நம்மிடம் உள்ளதை உதாரத்துவமாய் தர வேண்டும்.அப்பொழுது ஆண்டவர் இயேசு அவற்றை ஆசீர்வதித்து நிறைவாழ்வை நமக்கு கட்டளையிடுகிறார் ,நிறைவாக ஆசீர்வதிக்கிறார்.யோவான் 6:11,12-ல் நாம் இதை கவனிக்க முடியும்.இருந்ததோ ஐந்து வாற்கோதுமை அப்பங்களும்,இரண்டு மீன்களுமே ஆனால் ஐந்தாயிர்த்துக்கும் மேற்பட்ட மக்கள் உண்டு திருப்தியாகி மீதியாக 12 கூடைகனை சேர்த்தனர்.அதற்கு அடிப்படையானக் காரணம் ஆண்டவர் இயேசுவிடம் வந்து,உள்ளதைத் தந்து,நிறைவைப் பெற்றனர்.

நாழும் சிந்திப்போம்,

பவுல் கொரிந்து சபைக்கு குறிய்பிட்ட்டு எழுதுவது,அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல,தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்;உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்(2கொரி 9:7)இத்திருவார்த்தைகளை நம் வாழ்விலே உணர்ந்து,இந்த அறுவடைப் பண்டிகையிலேயே பங்கேற்போம்,நம்மை அர்ப்பணிப்போடு ஒப்புக்கொடுத்து,உதாரத்துவமாய்கர்த்தருக்கென்று நம்மைக் கொடுப்போம்.கர்த்தர் தாமே உறுதியாக,நிறைவாக நம்மை ஆசீர்வதிப்பார்,ஆமென்.

இறைப்பணியில்,
ஆயர்.



எண்ணெய் வணிகம் செய்தப் பெண்



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

அன்பானவர்களே, நமது ஆண்டவர் அனைவருக்கும் தாயும் தந்தையுமாக இருந்து வழி நடத்துகின்றவர்.

பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்
(சங் 146:9)

2 இராஜாக்கள் 4:1-7 வரை உள்ள பகுதியில் ஒரு பெண் தன் வாழ்வில் யாதுமற்ற நிலையில், தீர்க்கர் எலிசாவை சந்திக்கின்ற நிக்ழ்வும், அதன் வழியாக கர்த்தர் செய்த மகத்தான செயலையும் நாம் தெளிவாகப் பார்க்க முடியும்.

கடினமான நிலை

தீர்க்கதரிசியாக இருந்த தம் கணவரை இழந்த கைம்பெண்ணாகிய (Widow) ஒரு பெண், தீர்க்கர் எலிசாவிடம் வந்து தமது கடிளமான வாழ்க்கைச் சூழலை தெளிவாகக் கூறுகின்றார். தம் கணவர் கர்த்தருக்கு பயந்து வாழ்ந்தவர், அவர் இறந்து போனார். அதனால் பொருளாதார நெருக்கடி என்பதை தெளிவுறக் கூறுகின்றார். அந்தோ பரிதாபமான, கடினமான வாழ்க்கைச் சூழலில் சிக்கிய அந்தப் பெண் யாதுமற்ற நிலையில் கர்த்தரின் ஊழியர் எலிசாவை சந்திப்பதை 2 இராஜாக்கள் 4:1-ல் படிக்கின்றோம். நாமும் நமது கடினமான சூழலில் நாம் கர்த்தரையே தேட வேண்டும் அவர் சமூகத்தையே, நாட வேண்டும்.

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில் • 1/2

எண்ணெய் வணிகம் செய்தப் பெண

தொடர்ச்சி •

கருத்தான ஜெபம்

தீர்க்கர் எலிசாவிடம் கைம்பெண்ணாகிய அப்பெண், தமது கணவர் இறந்து போனார் என்பதையும், கடன் வாங்கின்தை கொடுக்க முடியாதச் சூழலில் கடன் கொடுத்தவர்கள் தனது இரண்டு மகன்களையும் அடிமைகளாக்கிக்கொள்ள வந்துள்ளனர் என்பதையும் கருத்தோடு தெரிவிக்கின்றார். கைம்பெண்ணின் கருத்தான ஜெபத்தால் அவருக்கான பதிலும் பலனும் கிடைத்தது.

நாம் நமது ஜெபங்களை கர்த்தரிடத்தில் மிகக்கருத்தோடு விண்ணப்பிக்க வேண்டும், அவர் திருச்சமுகத்தில் முறையாக சரியாக வேண்டுதல் செய்ய வேண்டும்.



கடவுளின் கருணை

கைம்பெண்ணின் விண்ணப்பத்தைக் கேட்ட எலிசா உன்னிடத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கின்றார். அப்பெண்ணும் அதற்கு தன்னிடத்தில் ஒரு குடம் எண்ணெய் இருப்பதை தெரிவிக்கின்றார் (2 இரா 4:2). உடனே எலிசா உனது அயல்வீட்டுக்காரர்களிடத்தில் பாத்திரங்களை வாங்கி அவற்றில் நிரப்பு என்று சொல்லுகிறார் அவையெல்லாம் அப்படியே நிரம்பி விடுகின்றது (2 இரா 4:3-6)

இதனை எலிசாவிடம் அப்பெண் தெரிவிக்கின்றார், உடனே எலிசா அவரிடம் நீ போய் அந்த எண்ணெயை விற்று உன் கடனைத் தீர்த்து, உன் வாழ்க்கையை நடத்து என்று கூறுகின்றார் (2 இரா 4:7) அப்படியே அவர் வாழ்வில் நடந்தேறுகிறது. கடவுளின் கருணை கைம்பெண்ணின் வாழ்வில் நிறைந்து, ஆசீர்வாதமாகின்றது.

நிறைவாக, பிரியமானவர்களே ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மிடம் கேட்பதும் இதுவே, உன்னிடம் என்ன இருக்கின்றது? உனக்குள்ளதையும், உன் உள்ளத்தையும் என்னிடம் முழுமையாக தந்திடு, நிறைவாக வாழ்ந்திடுவாய் என்பதே.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத் 11:28).

இறைப்பணியில்,
திருமதி.P.வேளாங்கள்னி,
ஆயரம்மா.

செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே...

கிருபையால் நம்மைத் தாங்கி, அண்பினால் நம்மை நடத்தி, ஒவ்வொரு நாளும் ஆசீர்வதித்து வரும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், உங்கள் அனைவருக்கும் ஆன்பான நல்வாழ்த்துக்கள்!

விடுமுறைக்காலத்திற்குப் பிறகு, நம்முடைய திருச்சபையில் சிறுவர் வேதாகமப் பள்ளி, *05.09.2026* அன்று தொடங்கவும் *CHAMP for CHRIST* போட்டிகள் *12.09.2026* அன்று சிறந்த முறையில் நடைபெறும் கிருபை செய்த தேவனுக்கு நன்றிகளைச் செலுத்துகிறேன்.

Champ for Christ போட்டிகளுக்கு நடுவர்களாகச் செயல்பட்ட திரு. மோகன்தாஸ், திருமதி. சாரா மோகன் மற்றும் திரு. பிரின்ஸ்லி ஸ்டான்லி ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


Champ for Christ போட்டிகளில் நமது பிள்ளைகள் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் கலந்துகொண்டு, தங்களுக்கு திறமைகளை வெளிப்படுத்தியது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது. பரிசுகளைப் பெற்ற பிள்ளைகளையும், போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து பிள்ளைகளையும் மனமார வாழ்த்துகிறேன்.

நம்முடைய திருச்சபையில் அக்டோபர் *24* ஆம் தேதி நடைபெறவுள்ள அறுவடைப் பண்டிகைக்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதற்காக நேரம், உழைப்பு மற்றும் ஒத்துழைப்பை வழங்கி வரும் சபையார் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள். இந்தப் பண்டிகையை சிறப்பாக நடத்துவதற்கு தொடர்ந்து உங்கள் அனைவரின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அன்புடன் எதிர்பார்க்கிறேன்.

கர்த்தர் நமது கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் உங்கள் வாழ்க்கை நாள்தோறும் நிறைந்து வழிநடத்துவாராக.

Belfer John Sigamoni
திருச்சபை செயலர்

மன்னா செப்டம்பர்-2026 மீன் பார்வை...



ஆண்டவர் இயேசு கிறிஸ்துக்கே மகிமை. செப்டம்பர் மாத மன்னாவைக் குறித்து மின் பார்வை.

பக்-3, ஆயர் மடலில் இயேசுவின் மலைப்பிரசங்கத்தின் முத்தாய்ப்பாக, என் வார்த்தையின் படி செய்கிற செய்கிற புத்தியுள்ளவர்களாக இருங்கள் என்றும்,

பக்-4ல், நகோமியின் வாழ்வின் சுசுந்த வாழ்விலே இனிமை உண்டானது போல, நம் வாழ்விலும் ஆண்டவரைப் பற்றி வாழ்ந்தால் இனிமையே நிலைக்கும் என்றும்,

பக்-6, செயலர் மடலில் திருச்சபையின் நிகழ்வுகள் பற்றியும்,

பக்-7 ல், பூமியில் வாழ்கின்ற போது மேலானவைகளையே நாடுங்கள், அதுவே மெய்யான ஆசீர்வாதமாக அமையும் என்றும்,

பக்-9ல், காத்திருந்து சோர்ந்து போகாமல் கர்த்தரையே பற்றிக்கொள்வோம் அப்போது பரிபூரண நிறைவைப் பெறுவோம் என்றும்,

பக்-11 ல், நம்மை வடிவமைத்து உருவாக்கிய கர்த்தரில் நம்மை அர்ப்பணித்து ஆசீயைப் பெறுவோம் என்றும்,

பக்-12ல், திருமறை வினாக்கள், விடைகள் எழுதியுள்ளார், சிறு பிள்ளைகளின் கை வண்ணங்கள், சிறு பிள்ளைகளுக்கான புதிர்கள், மற்றும் Article எழுதின அனைவருக்கும் பாராட்டுக்கள். கர்த்தர் நாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,
ஆயர்.



God's Design *for* Handling Hard Times

When life gets overwhelming and fear makes it hard to catch a breath, the simple act of looking out the window can change everything. Pausing to watch the birds and look at the plants reminds us of a comforting truth: the same God who manages all of creation is also taking care of us.

When Jesus told His followers to "see how the flowers of the field grow," He was pointing to a simple reality. Nature teaches us a lot about trust, timing, and rest.

1. Strength in the Quiet

Seeds and roots know when to sprout and when to lie low. Sometimes, a plant looks entirely dead above ground, but underneath, its roots are growing deeper and holding on for the next season. When we go through dry or difficult times, **God is often doing quiet, hidden work inside us that we can't yet see.**



2. The Strength to Adapt

Just as plants respond to temperature, light, and water, God designed our bodies and minds to navigate life's shifting seasons. We don't have to panic during times of grief, stress, or change. God has built us with the inner strength to grieve, adapt, and rest when we need to.

3. Interconnected Strength



Consider the chickadee. This tiny bird hides thousands of seeds to survive winter. It has an incredible memory, but it still relies completely on trees, weather, and the surrounding environment to survive. In the same way, we aren't meant to carry life's burdens purely on our own willpower. We need God, nature, and the people around us to thrive.

4. The Power of the Pause

When anxiety starts to take over, we have a choice. We can let fear control us, or we can pause and remember who is in control. Take a deep breath. Look at the birds and the trees. God knows what you need, He is caring for you in this exact season, and you are never alone.

Anchored in Hope

Ultimately, nature serves as a powerful reminder of God's care, design, and provision. When life gets overwhelming, taking a moment to observe creation grounds us in the reassuring truth that we are sustained, equipped for every season, and never truly alone.

Article by,
Mr. Ravindra
Men's Fellowship





கடவுளின் பார்வையில் நாம்!

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, அன்பான வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களையும் கூறிக் கொள்கிறேன்.

1 பேதுரு 2:9 இப்படி சொல்லுகிறது:

"நீங்களோ,... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."

மனிதர்கள் சில நேரங்களில் நம்மை குறைவாக மதிப்பிடலாம். "நீங்கள் தேவையில்லை", "உங்களால் எதுவும் முடியாது", "நீங்கள் திறமையானவர் அல்ல" என்று சிலர் நம்மிடம் கூறலாம். ஆனால் நம் ஆண்டவர் நம்மைக் குறித்து அப்படிக் கருதுவதில்லை.

நம் ஆண்டவர் நம்மை பிரமிக்கத்தக்க விதமாகவும், ஆச்சரியப்படத்தக்க விதமாகவும் படைத்திருக்கிறார். திறமையுடனும் ஞானத்துடனும் இந்த உலகத்தில் ஒளியாக இருக்கும்படி நம்மை உருவாக்கியிருக்கிறார்.

எப்போதெல்லாம் நம்மைப் ப்ற்றி நாம் குறைவாக எண்ணுகிறோமோ, அப்போதெல்லாம் ஒரு காரியத்தை நினைவில் கொள்ள வேண்டும்: எனக்கான ஆண்டவருடைய திட்டங்கள் நன்மைக்கானவையே; தீமைக்கானவை அல்ல. மேலும், என் நம்பிக்கை அவர்மேல் மாத்திரமே உள்ளது என்று நம்மை நாமே நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களும், நாம் வாழும் சூழ்நிலைகளும் எப்போதும் நியாயமானதாக இருக்காமல் இருக்கலாம். ஆனால் நம்மைப் படைத்த ஆண்டவர் நியாயமானவர். அவர் நமக்கு இரட்டிப்பான நன்மைலயத் தருவதற்கு வல்லவர் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

1 நாளாகமம் 28:9 இப்படி கூறுகிறது:

"கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களை எல்லாம் அறிகிறார்."

நாம் தாயின் வயிற்றில் உருவாகும் முன்னரே நம்மை அறிந்தவர் நம் ஆண்டவர். அவருடைய பார்வையில் நாம் விலையுயர்ந்தவர்களே!

நாம் எப்படி இருந்தாலும் அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார். அவர் நம்மைத் தேர்ந்தெடுக்கிறார். நம்மை முக்கியமானவர்களாகவும், ஆசீர்வாதமானவர்களாகவும் வாழச் செய்கிறார்.

எனவே, அந்த **விசுவாசத்தோடு** நம் பயணத்தைத் தொடர்வோம்.

ஆமென்.

Article by,
Mrs. Mercy Thangaraj,
Women's Fellowship.

துணிவும், விசுவாசமும் நிறைந்தப் பெண்-எஸ்தர்



எஸ்தர் பாரசீகத்தில் வாழ்ந்த ஒரு யூத பெண், அவள் பெற்றோர் மரித்துவிட்டார்கள். எனவே அவருடைய ஒன்று விட்ட அண்ணன் மொர்தெகாய் அவளைப் பாதுகாத்து, பராமரித்து வந்தார். பாரசீக ராஜாவாகிய அகாஸ்வேரு ஒரு புதிய ராணியைத் தெரிவு செய்யும்போது எஸ்தரும் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். ராஜா எஸ்தரை தேர்ந்தெடுத்தார். அவள் பாரசீக நாட்டின் அரண்மனையில் ராணியாக உயர்ந்தாள். ஆனால் அவள் பெற்ற அந்த உயர்பதவிக்குப் பின்னால், பெரிய கர்த்தரின் திட்டமிருந்தது.

ராஜாவின் அரண்மனையில் ஆமான் என்ற அதிகாரி, மிகுந்த அதிகாரமும் செல்வாக்கமும் பெற்றிருந்தார். மொர்தெகாய் அவரைப் பணிந்து, வணங்க மறுத்ததால் ஆமான் கோபமடைந்து, மொர்தெகாயை மட்டும் அழிப்பது அல்லாமல் அனைத்து யூதர்களையும் அழிக்க திட்டமிட்டார். ராஜாவின் அனுமதியையும் இதற்காகப் பெற்றார். இந்தச் செய்தியை அறிந்த மொர்தெகாய் துக்கம் அடைந்து, எஸ்தரிடம் செய்தியை தெரிவித்தார். தன் மக்களுக்காக ராஜாவிடம் சென்று, வேண்டிக் கொள்ளும்படி அவளை கேட்டுக்கொண்டார்.

சில சமயங்களில் ராஜா அழைக்காமல் அவருடைய சமூகத்தில் எவரும் செல்ல முடியாது. அவ்வாறு சென்றால் மரண தண்டனை கிடைக்கக்கூடும் என்ற செய்தியை எஸ்தர் மொர்தெகாய்க்குத் தெரிவித்தார். அதற்கு மொர்தெகாய், “நீ இப்படிப்பட்டக் காலத்துக்கு உதவியாக இருக்கும் படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே, யார் அறிவார்” என்றார் (எஸ் 4:14). இந்த வார்த்தைகள் எஸ்தருடைய வாழ்க்கையின் நோக்கத்தை அவளுக்கு உணர்த்தின.

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில் • 1/2

எஸ்தர் • தொடர்ச்சி


பின்பு எஸ்தர் மூன்று நாட்கள் உபவாசிக்கும்படி மொர்தெகாயிடமும், யூதர்களிடமும் கேட்டுக்கொண்டாள். அவளும் தன் பணிப்பெண்களுடன் உபவாசித்தாள். பின்பு அவள் தைரியமாக நான் அழிந்தாலும் அழிகிறேன் என்றுச் சொல்லி, பயமின்றி ராஜாவின் அரண்மனைக்குள் சென்று ராஜாவின் தயவு பெற்றாள். அவள் ராஜாவை அணுகியபோது, அவன் தன் செங்கோலை நீட்டினான். எஸ்தர் ராஜாவையும் ஆமானையும் விருந்துக்கு அழைத்தாள். பின்னர் சரியான நேரத்தில் தான் யூதப் பெண் என்பதையும், ஆமான் தன் ஜனங்களை அழிக்க திட்டமிட்டு இருப்பதையும் ராஜாவிடம் வெளிப்படுத்தினார். ராஜா ஆமான் மீது கோபமடைந்து அவனைக் கொன்றான். ராஜா யூதர்களை பாதுகாக்கும் ஒரு புதிய சட்டத்தை கொண்டு வந்தார். எஸ்தரின் கர்த்தர் மீதுள்ள விசுவாசம் யூத மக்களைக் காப்பாற்றியது. மரணம் மற்றும் துக்கத்திற்கு பதிலாக, ஒரு மகிழ்வின் விருந்து நடந்தது, யூதர்கள் கொண்டாடினர்.




கர்த்தர் நம் வாழ்க்கையில் செயல்படும்போது, அது எப்போதும் வெளிப்படையான அற்புதமாகத் தெரிய வேண்டியதில்லை. சில நேரங்களில் சாதாரண நிகழ்வுகளின் வழியாகவே அவர் தமது திட்டத்தை நிறைவேற்றுகிறார். எஸ்தரின் வாழ்வில் ஆண்டவராகிய கர்த்தர் சாதாரண மனிதரை ஒரு அசாத்தியமான நோக்கத்திற்காக பயன்படுத்திய அற்புத நிகழ்வை காண்கிறோம். எஸ்தர் சூழ்நிலையைப் பார்த்து பின்வாங்கவில்லை. தன் பதவியை தனக்காக மட்டும் பயன்படுத்தாமல், பிறரின் நன்மைக்காக பயன்படுத்தினாள்.

எஸ்தரைப் போல நாமும் விசுவாசத்துடன் காத்திருந்து, ஞானமும்-துணிவுடனும் செயல்பட்டு கர்த்தருடைய நோக்கத்திற்காக நம்மை அர்ப்பணித்து வாழ்வோமாக ஆமென்.

Article by,
Mrs. Revathi Ramesh,
Youth fellowship.



JOFINA




INIYAN IMMANUEL

Teacher: Mrs. PHILOMINA ASHOK

CBS - INTERMEDIATE



REAGAN SHAN



JEROAN STANLY

GOD'S TIMING NEVER FAILS.

WHAT LOOKS LIKE A DELAY IS NEVER A DENIAL.



If God did it for Joseph,

HE CAN DO IT FOR YOU.

HE'S WRITING YOUR STORY.

TRUST THE PROCESS.

HOW TO BE A CHRISTIAN in Modern Life

LIVE BOLDLY. LOVE DEEPLY. FOLLOW JESUS DAILY.



YOU CAN...

- Love God with your whole heart
- Live out your faith every day
- Be a light in your world
- Stay true to God in a culture that's constantly changing

You don't have to be perfect, just faithful.

10 WAYS TO LIVE YOUR FAITH EVERY DAY

1 START YOUR DAY WITH GOD

Spend time in prayer and God's Word before anything else.

PSALM 5:3

2 MANAGE YOUR TIME WISELY

Be intentional with your time and focus on what matters most.

EPHESIANS 5:15-16

3 SPEAK LIFE AND TRUTH

Let your words encourage, uplift, and reflect God's love.

PROVERBS 18:21

4 GUARD YOUR HEART & MIND

Limit distractions and fill your mind with what is pure.

PHILIPPIANS 4:8

5 LET YOUR LIGHT SHINE

Live in a way that points others to Jesus.

MATTHEW 5:16

6 SURROUND YOURSELF WITH GODLY PEOPLE

Do life with people who encourage your faith and growth.

PROVERBS 13:20

7 SERVE OTHERS WITH LOVE

Look for ways to bless others and make a difference.

GALATIANS 5:13

8 STAY HUMBLE AND TEACHABLE

Keep growing in faith and be open to God's guidance.

PROVERBS 3:5-6

9 TRUST GOD IN EVERY SEASON

He is with you in the highs and lows. He never changes.

ROMANS 8:28

10 MAKE WORSHIP A LIFESTYLE

Worship God not just on Sunday, but in every moment.

1 THESSALONIANS 5:17

DAILY FAITH CHECKLIST

- Time with God (prayer + Bible)
- Grateful heart
- Kind words
- Acts of love
- Faith over fear
- Trust God's plan

REMEMBER

You are not alone.
You are chosen, loved, forgiven, and called for a purpose.

God has your back!

A PRAYER FOR YOU

Lord, help me to live for You today. Give me strength to follow You, love like You, and trust You in every area of my life. May my life bring You glory in all that I do. Amen.

BE TRANSFORMED. RENEW YOUR MIND. LIVE FOR HIS GLORY.
ROMANS 12:2

PSALMS 61-75
சங்கீதம் 61-75

1. யாருடைய நாட்களோடு நாட்களைக் கூட்டுவார்?
2. தராசிலே வைக்கப்பட்டால் லேசானவர்கள் யார்?
3. ஜீவனைப் பார்க்கிலும் நல்லது எது?
4. கர்த்தருக்குள் மகிழ்ந்து அவரை யார் நம்புவான்?
5. பள்ளத்தாக்குகளில் மூடி இருப்பது என்ன?
6. எங்கே வருத்தமான பாரம் ஏற்றப்பட்டது?
7. ஜைவகள் தேவனுக்குப் பயந்திருக்கும்?
8. மிருகக் கூட்டம் இருப்பது எங்கே?
9. யாரைக் கர்த்தர் புறக்கணியார்?
10. யார் வெட்கத்தினால் பின்னிட்டுப் போவார்களாக?
11. தேவனே எதுவரைக்கும் என்னைக் கைவிடிராக?
12. எதைப்போல நகர்த்தார் செழித்தோங்குவார்கள்?
13. தேவ்னே உமக்கு முன்பாக எதைப்போல இருந்தேன்?
14. வனாந்தரத்து ஜனங்களுக்கு உணவாகக் கொடுக்கப்பட்டது எது?
15. யாருடைய கொம்புகள் உயர்த்தப்படும்?

செப்டம்பர்-2026 மாத வினாவிற்கான விடைகள்

1. சங் 46:6,
2. சங் 47:9,
3. சங் 48:7,
4. சங் 49:12,20,
5. சங் 50:23,
6. சங் 51:17,
7. சங் 52:8,
8. சங் 53:6,
9. சங் 54:6,
10. சங் 55:21,
11. சங் 56:8,
12. சங் 57:8,
13. சங் 58:8,
14. சங் 59:14,
15. சங் 60:7.

செப்டம்பர்-2026 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

- திருமதி.ஜெனிபர் பால்,
- திருமதி.ஜெயின் ராஜவேல்,
- திருமதி.பிப்ளின் நெல்சன்,
- திருமதி.ஹேமலதர் ஸ்ஹட்ன்,
- செல்வி.அஜின்ஷா,
- திருமதி.ரோஸ்மேரி,
- திருமதி.ராதிகா செல்வக்குமார்.

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதன் அடுத்தும் மற்றும் வசகுமும் குறிப்பிட்டு ஏபாரதம் 1ம் தேதிக்குள முன் சபிப்பில் அல்லது வாட்சப் மூலம் கீழ்கண்ட தேவாலய அலுவல் மவிக்கதும்.

SEPTEMBER-2026 - WINNERS

KIDS COLOURING	:	Iniyan Immanuel, Iniyal Evangeline
WORD SEARCH	:	Iniyan Immanuel, Iniyal Evangeline
CROSS WORD	:	Iniyan Immanuel, Iniyal Evangeline, Sherinsha
FIND THE WAY	:	Iniyan Immanuel, Iniyal Evangeline

Colour & Create

COLOURING • Bring this joyful scene to life.



Growing in Faith

WORD SEARCH • Find 15 words hidden in the garden.

Name: _____ Date: _____

F U N H X N W G P G R A C E Z W
A V H E E G T R P P Y M L H S A
A X J R R D A Q B E U A O T V R
K K V N N I W G B A I G T M N S
T Q E B S D C E R C R W Y B B S
G N K E G L T Y C E R K D N Z E
E B I G O O D N E S S N W O S N
N C N B L T D V H Z E C E V I L
T L D Z Y S T Y V C W T N L Q U
L P N T M U W B N P B H E S A F
E Q E D T R W E P R B A S F T H
N B S W A T I Z N A B N J E N T
E F S C J T F D C Y T K B V A I
S V N R A E P O H E A S Z O Y A
S I P P K U U R X R M A D L O F
L O R T N O C F L E S D G O J H

Words run across, down or diagonally, in either direction.


LOVE
PATIENCE
FAITHFULNESS
PRAYER
GRACE
JOY
KINDNESS
GENTLENESS
HOPE
THANKS
PEACE
GOODNESS
SELF-CONTROL
TRUST
PRAISE

The Shepherd’s Path

MAZE • Help the little lamb find its way home.

Name: _____ Date: _____

START ↓



HOME




“The Lord is my shepherd.”

PSALM 23:1

People of the Bible

CROSSWORD • Read the clues and fill in the answers.

Name: _____ Date: _____



ACROSS

1. Man who prayed and faced a den of lions. (6)

6. Leader who brought Israel out of Egypt. (5)

7. Town where Jesus was born. (9)

9. Talking to God. (6)

DOWN

1. Young shepherd who defeated Goliath. (5)

2. Man who built the ark. (4)

3. Queen who helped save her people. (6)

4. Prophet swallowed by a great fish. (5)

5. Naomi's faithful daughter-in-law. (4)

8. Mother of Jesus. (4)

OCTOBER 2026

CSI TAMIL PARISH, AL AIN

Birthdays

01 OCT	Mrs. John Gerald Sheeba Derick
01 OCT	Ms. H. Johanna Jane
01 OCT	Ms. Angilin Remi Princy
03 OCT	Ms. Smyrna Syntche
03 OCT	Mr. J. Stephen Chellaraj
03 OCT	Mrs. J. Blessy
04 OCT	Mr. Praveen Paul
05 OCT	Master. Immanuel Suthan
05 OCT	Ms. Nivina Chandrasekar
07 OCT	Mr. Sharvin John
08 OCT	Ms. Akila
08 OCT	Ms. Janet Zaharina
09 OCT	Ms. D.P. Mercy
09 OCT	Master. J. Jernus
11 OCT	Mr. Prabu Dinesh Kumar
13 OCT	Mrs. Anitha Geroge
13 OCT	Mrs. Sowmiya Anish
14 OCT	Mrs. Godshilin
15 OCT	Master. Jovin
15 OCT	Master. Godson Daniel Rao
17 OCT	Mrs. Sahila Grace Justin

OCTOBER 2026

Birthdays – continued

17 OCT	Master. Zyan Maverick Vijinraj
18 OCT	Mrs. Helen Hemabai
20 OCT	Ms. Aidean Joyphonse Derick
20 OCT	Mrs. Patricia Santhi
20 OCT	Master. Leon Roy Samuel
21 OCT	Ms. Athithi Shamma
21 OCT	Mr. J.C. Jesho
22 OCT	Mrs. Sheeba Deva Prakash
23 OCT	Ms. B.N. Kariss Angelo
23 OCT	Mrs. Biblin Christabel
24 OCT	Mr. Justin Oliver
24 OCT	Ms. A. Jemimah
24 OCT	Mrs. Melbin Subithra
27 OCT	Mr. Jayan Dharmaraj
29 OCT	Ms. Abigail Christine
29 OCT	Mrs. Marylene Hana
30 OCT	Mr. Pavul Hensman
30 OCT	Mr. Ashok Jayakumar Hanly Paul
30 OCT	Ms. Siyona Blessy
31 OCT	Master. Eion Jayden

Wedding Anniversaries

05 OCT	Mr. Ravindra & Mrs. Sunitha Ravindra
11 OCT	Mr. Daniel Durai Singh & Mrs. Pamela Rachel Dan
21 OCT	Mr. Prabu Dinesh Kumar & Mrs. Rebecca
24 OCT	Mr. Deenith & Mrs. Karunya

CFC
Champ for Christ

CSI TAMIL CHURCH AL AIN | 2026

Little hearts. Beautiful gifts. Joyful memories.













CFC
Champ for Christ

CSI TAMIL CHURCH AL AIN | 2026

Little hearts. Beautiful gifts. Joyful memories.













CFC
Champ for Christ

CSI TAMIL CHURCH AL AIN | 2026

Little hearts. Beautiful gifts. Joyful memories.














CFC
Champ for Christ

CSI TAMIL CHURCH AL AIN | 2026

Little hearts. Beautiful gifts. Joyful memories.













CSI TAMIL PARISH
ALAIN

TOGETHER IN CHRIST
FOR A GREATER TOMORROW

"Give thanks to the Lord,
for He is good;
His steadfast love endures forever."
Psalm 136:1

PRAY & Prepared

Freely you have received;
Freely give.

Matthew 10:8

HARVEST FESTIVAL

GIVING | SHARING | BLESSING | TOGETHER

A Harvest for His Kingdom

DATE
24th Oct, 2026
Saturday
4.30 PM onwards

PLACE
Grand Stand,
Equestrian Club,
Al Ain.

CHIEF GUEST
Rev. J. Raj Kumar
Presbyter, C.S.I. Fujairah

PEOPLE
PURPOSE
GENEROSITY
ETERNAL IMPACT

" The harvest is plentiful,
but the labourers are few."
Matthew 9:37

EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY